**பலங்கொட பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 27 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 16 ஆம் திகதி மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 31 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் பலங்கொட பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடங்கிய 13 காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு கணக்கிட வேண்டும். | மதிப்பிடப்பட்டு கணக்கிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | வாழ்வு எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தினால் 2014 நவம்பர் மாதம் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 645,381 பெறுமதியான 583 முலாம் பூசபட்டகுழாய்கள் நடைமுறை அல்லாத சொத்தாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை அல்லாத சொத்தாக கணக்கிடப்பட வேண்டும். | 2019 கணக்குகள் தயாரிக்கும் போது கணக்கிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | மாகாண சபையின் கருத்திட்டங்களுக்காக மீளாய்வாண்டில் பெறவேண்டிய ரூபா 5,440,572 யினை கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | பெறுவனவு சரியாக இனங்கண்டு கணக்கிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியாக கணக்கிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | முன்னைய ஆண்டிற்குறிய மீண்டுவரும் வருமானம் ரூபா 23,000 மற்றும் மூலதன வருமானம் ரூபா 807,477 யினை கணக்கிடப்பட்டிருக்கவில்லை.மீளாய்வாண்டில் மீண்டுவரும் மற்றும் மூலதன வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தது. | காலபகுதியை சரியாக இனங்கண்டு கணக்கிடப்பட வேண்டும். | தவருதலாக. ஏதிர்காலத்தில் இந்த குறைபாடுகள் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டில் கைதொழில் நிர்மாணத்திற்காக ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 5,440,572 யினை கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | அட்டுறு செலவினம் சரியாக இனங்கண்டு கணக்கிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியாக கணக்கிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஊ) | 2012 முதல் 2016 வரை ஆண்டுகளுக்குரிய கூட்டுத்தொகை ரூபா 963,083 ஆன 15 கைத்தொழில் கடன் கொடுனர் மீதிகள் தீர்ப்பதற்கு 2019 மார்ச் வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காலத்திற்கேற்ப கணக்குகள் தீர்க்க வேண்டும். | எதிர்காலத்தில் இந்த கைத்தொழில் கடன் கொடுனர் மீதிகள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (எ) | 2009, 2012, 2015 மற்றும் 2016 ஆண்டுகளிற்குறிய கூட்டுத்தொகை ரூபா 76,375 ஆன செலவின கடன் கொடுனர் 05 மீதிகள் தீர்ப்பதற்கு 2019 மார்ச் வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த கணக்குகள் மீதி இடையில் வேறுபாட்டை இனங்கண்டு தீர்த்து கொள்ள வேண்டும். | எதிர்காலத்தில் கண்டறிந்து சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

## 1.4 இணங்காமை

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | பெறுமதி | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் | | | | |
| (i) 24 ஆம் பிரிவின் 1(அ) மற்றும் (ஆ) உப பிரிவு | 1974 ஆண்டின் பின் சபைக்கு சொந்தமான பாதைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | ஏதிர்காலத்தில் சபைக்கு சொந்தமான பாதைகள் தொடர்பாக சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) 154(1) ஆம் பிரிவு | காணிகள் பிரிக்கப்பட்டு விற்பதனால கிடைக்கும் பணத்திலிந்து ஒரு சதவீத வரி பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய போதும் 6 காணி துண்டுகளிலிருந்து வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | - | சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | பிரிக்கப்பட்டு விற்கப்பட்ட காணிகள் தொடர்பாக ஏதிர்காலத்தில் கண்டறிந்து சட்டத்தின பிரிவுகள் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | . | | . | . |
| (i) | நிதிப்பிரமாணம் 371(5) | 1992 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த 37 கட்டுநிதிகள் 2019 பெப்ரவரி வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | 557,848 | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏதிர்காலத்தில் தகவல்களை கண்டறிந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | உரிமை கோரப்படாத 266 காலாவதியான வைப்புக்களை சீராக்க தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 1,610,698 | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் ஒவ்வொறு அரையாண்டும் உரிமை கோரப்படாத காலாவதியான வைப்புக்களை சீராக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | திறைசேறி செயலாளரின் 01/2018 இலக்க மற்றும் 2018 மார்ச் 19 ஆம் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை. | பொருட்கள் மெய்மை ஆய்வறிக்கை படி பாவணையிலிருந்து ஒதுக்கப்பட்ட ஓர் கெப் வண்டி, 02 நாட்சில்லு டெக்டர்கள், 03 இரண்டு சில்லு டெக்டர்கள், 04 டெக்டர் டேலர்கள் மற்றும் 22 டெக்டர் உதிரிப்பாகங்களை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த டெக்டர் வண்டி மற்றும் இயந்திர உபகரணங்களின் சட்டரீதியான உரிமையை சபைக்கு சுவீகரித்துக் கொண்டில்லாதுடன், மகாசபை தீர்மானத்தின் மூலம் அவற்றின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இது தொடர்பாக பிரதேச செயலாளர் அறிவூட்டப்பட்டுள்ளதுடன், துருப்பிடிக்கும் இவ் வாகனம் மற்றும் உபகரணங்களை எதிர்காலத்தில் ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 3.4 பிரிவு | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகளுக்கு மாற்றமாக 04 சந்தர்ப்பங்களில் ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரம் விலை மனு கோரப்பட்டு | 467,833 | வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். | இவ் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனம் பொருள் உற்பத்தி நிறுவனமாகையால் வேறு நிறுவனங்களிலிருந்து விலை மனு |

| | | |
|---|---|---|
| | அலுவலக உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | கோரப்படாததுடன் எதிர்காலத்தில் கொள்வனவின் போது பல நிறுவனங்களிலிருந்து விலை மனு கோரி கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 6,220,843 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 8,830,848 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 1,723,425 | 1,723,425 | 1,306,730 | 269,540 | 1,523,380 | 1,523,380 | 2,324,990 | 253,318 |
| (ii) | வாடகை | 3,389,750 | 3,396,000 | 2,679,638 | 74,343 | 3,553,375 | 3,553,375 | 2,188,057 | 158,343 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 507,500 | 507,500 | 620,916 | 141,100 | 232,500 | 232,500 | 312,310 | 96,100 |
| (iv) | பிடியாணை மற்றும தண்டப்பணம் | 2,052,500 | 2,787,045 | 2,460,690 | 2,937,182 | 2,602,500 | 2,663,582 | 1,349,935 | 2,651,591 |
| (v) | ஏனைய வருமானம் | 7,767,500 | 7,767,500 | 676,584 | 19,812,938 | 5,908,500 | 5,388,500 | 9,523,338 | 12,506,264 |

### 2.2.2 வீத வரி மற்றும் குத்தகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் 1988/22 மற்றும் 1988 மே 17 திகதிய சுற்றறிக்கை ஆலோசணை படி நடவடிக்கை எடுத்திருக்காததுடன் இறுதியாக | சுற்றறிக்கை ஆலோசணை படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீதவரி புதிய பெறுமதி மதிப்பீடொன்றை செய்து தருமாறு பல தடவைகள் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு எழுத்து மூலம் கோரிக்ககை விடுத்ததுடன், அதன் பிரகாரம் 2019 பெறுமதி |

| | |
|---|---|
| சொத்து பெறமதி மதிப்பீடு 2005 ஆண்டு மேற்கொள்ளப்பட்டு இருந்தமையால் புதிய சொத்து பெறமதி மதிப்பீடொன்றினூடாக வீதவரியை திருத்தி வீதவரி வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியாதிருந்தது. | மீள்மதிப்பீட்டு நிகழ்சித் திட்டத்திற்கு எமது பிரதேச சபையையும் உட்படுத்தியுள்ளதாகவும் இவ்வாண்டினுள் அந்நடவடிக்கைகளை ஆரம்பிப்பதாகவும் மாவட்ட மதிப்பீட்டாளர் அறிவித்துள்ளார். |

### 2.2.3 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து 2018 திசம்பர் 31 திகதிக்கு பெறவேண்டிய நீதிமன்ற தண்டபணம் ரூபா 2,937,182 இனையும் 2017 மற்றும் 2018 ஆண்டுகயுளுக்காக பெற வேண்டிய முத்திரை கட்டணத்தை இனங்கண்டு அறவிடுவதற்கு 2018 பெப்ரவரி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவல்லை. | வருமானம் சேர்த்துக்கொள்ள செயற்பட வேண்டும். | 2018 ஆண்டிற்காக நீதிமன்ற தண்டபணத்தை பெற்றுக் கொள்ள உள்ளூராட்சி ஆணையாளரிற்கு அட்டவணை சமர்பிக்கப்பட்டுள்ளது. 2017 ஆண்டிற்கான முத்திரைக் கட்டணம் காணிப்பதிவாளர் அலுவலகத்தினூடாக மாகாண வருமான ஆணையாளரிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அத் தொகையை எதிர்காலத்தில் சபைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) துணைச் சட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகார சட்டத்தின் 126 பிரிவின் கீழ் துணைச் சட்டம் அமுல்படுத்த வேண்டிய 30 விடயங்களில் 28 விடயங்களிற்கு 2018 நவம்பர் வரையிலும் துணைச் சட்டம் அமுல்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | துணைச் சட்டங்களை உருவாக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் குறித்த துணைச் சட்டங்களை உருவாக்கிக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |

#### (ஆ) கழிவுப் பொருள் முகாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 இல் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படு பொது மக்கள் எதிர்பு | கழிவுப் பொருள் முகாமை | சபை அதிகார எல்லையில் கழிவுப் பொருள் சேகரிக்க |

| | | |
|---|---|---|
| காரணமாக கைவிடப்பட்டிருந்த கழிவுப் பொருள் முகாமை மத்திய நிலையத்தை பொறுத்தமான இடமொன்னை இனங்கண்டு மீண்டும் ஆரம்பிக்க மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக சபை அதிகார எல்லையில் கழிவுப் பொருள் சேகரிப்பு இடம்பெறாததுடன் அது பொது மக்கள் சுகாதாரம் மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளுக்கும் காரணமாக உள்ளது. | தொடரபாக துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். | காலசூசி தயாரிக்கப்பட்டு பாதைகளின் பிரகாரம் பிரிவுகளாக பிரக்கப்பட்டுள்ளது. எனினும் ஒன்று சேறும் கழிவுப் பொருட்களை வெளியேற்ற பொருத்தமான இடமொன்று அல்லது கழிவுப் பொருள் கொட்டில் ஒன்று சபைக்கு சொந்தமாக இல்லாததுடன் கழிவுப் பொருள் சேகரிக் |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக 2030 நிகழ்சி நிரல் பற்றி சபை அறிந்திருந்த போதும், தமது விடய பரப்பெல்லை பிரகாரம் அடைந்து கொள்ளக் கூடிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கிலான தரவுகள், இலக்குகள் சென்றடைய வேண்டிய இடங்கள் போன்று முன்னேற்றத்தை அளவிடக்கூடிய குறிகாட்டிகளை இனங்காண நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக நீண்டகால திட்டங்களை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக நீண்டகால திட்டங்களை தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆண்டின் பாதீடு பிரகாரம் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 7,700,000 ஆன 08 கருத்திட்டங்களை ஒதுக்கீடு கிடைக்கப் பெறாமையினால் மேற்கொள்ள மீளாய்வாண்டு இறுதி வரையும் இயலாமலிருந்தது. | முக்கியத்துவ அடிப்படையில் மூலதன கருத்திட்டங்களுக்கு பாதீடு தயாரிப்பதற்காக மற்றும் ஒதுக்கீடு கிடைப்பதனை உறுதிபடுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 பாதீட்டில் பொது மக்கள் கோரிக்கைகள் மீதான அபிவிருத்தி கருத்திட்டங்களுக்காக ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதும் குறித்த ஆண்டினுள் மத்திய அரசிலிருந்து மற்றும் மாகாண சபையிலிருந்து ஒதுக்கீடு கிடைக்காததனால் எதிர்பார்த்த விதத்தில் அபிவிருத்தி கருத்திட்டங்களை மேற்கொள்ள முடியாமலிருந்தது என வினையமாக தெரிவிக்கிறேன். |
| (ஆ) | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களுக்குரிய பணிகளை பகிர்ந்து நியமப்படுத்த வேண்டிய போதும் காசேடு, வைப்பு , கடன்கொடுத்தோர் மற்றும் முற்பண பதிவேடு பராமரித்தல், காசோலை எழுதுதல், கணக்கு அறிக்கைகள் மற்றும் இறுதி | ஒருவரின் வேலைகள் இன்னொருவரின் மேற்பார்வைக்கு உள்ளாகும் வகையில் வேலைப் பகிர்வு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் பணிகளை ஒப்படைக்கும் போது பல உத்தியோகத்தர்களிற்கிடையில் இப் பணிகளை பகிர்ந்தளித்து மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

கணக்குகள் தயாரித்தல் என்பன ஓர் அலுவலருக்கு ஒப்படைத்திருந்ததனால் நிதி ஒழுங்கீனங்கள் ஏற்படும் அபாயம் நிலவின.

**3.3 மனித வள முகாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வெற்றிடம் நிலவும் செயலாளர் பதவியின் பதில் கடமைபுரிவதற்காக 2017 ஆண்டு முதல் பொது முகாமை தரம் 1 அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | வெற்றிடத்தை நிறப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும;. | மாகாண பொது சேவை ஆணைக்குழு செயலாளரின் கடிதம் பிரகாரம் பதில் கடமைபுரிய செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார். இப் பதவி வெற்றிடமாக நிலவுவதாக பல சந்தர்ப்பங்களில் ஆணையாளர் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | வேலை களநிர்வாக உத்தியோகத்தர், ஆயுர்வேத மருந்து கலவையாளர், சுடலை இயக்குனர், நூலக பொருப்பாளர், கனரக வாகன இயந்திர இயக்குனர், சுகாதார தொழிலாளி, வேலை கள தொழிலாளி மற்றும் சாரதி போன்ற பதவிகளில் 15 வெற்றிடங்களை நிறப்ப நடவடிக்கை எடுக்காமையினால் குறித்த வேலைகளை மற்றும் செயற்பாடுகளை வினைதிறனாகவும் பயனுறுதிமிக்கதாகவும் நிறைவேற்ற முடியாமலிருந்நது. | வெற்றிடங்களை நிறப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும | இந்த பதவிகள் வெற்றிடங்களாக நிலவுவதாக வருடாந்த ஆளணி அறிக்கை ஊடாக பிரதான செயலாளருக்கு மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதேச சபையினால் நியமிக்க முடியுமான ஆரம்ப நிலை தொழிலாளர் பதவிக்காக எதிர்காலத்தில் ஊழியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விற்பனை செய்யும் காணியின் பெறுமதியின் 1 சதவீத வரி தொகையை காணி விற்பனை செய்யப்படும் போது விற்பனையாளரால் சபைக்கு செலுத்துவதாக நிபந்தனைகள் உள்ளிட்ட உடன்படிக்கையை கைச்சாத்திட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2006 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை 22 காணி | விற்பனையாளகளுடன் உடன்படிக்கை கைச்சாத்திட வேண்டியதுடன் உரிய பிரகாரம் காணி ஒப்பினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை | 1% ஆன வரி தொகையை உள்ளடக்கிய நிபந்தனைகளுடன் உடன்படிக்கை கைச்சாத்திடவும், 70.37 பர்சஸ் குறிப்பிட்ட காணியின் ஏலவிற்பனையாளருடன் தொடர்பு கொண்டு அவ் உறுதியினை பெற்றுக்கொள்ளவும், |

| | | |
|---|---|---|
| ஏலவிற்பனைகளினால் பொது நடவடிக்கைகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்ட 70.37 பர்சஸ் காணிக்களுக்குக்கான உறுதிகளை பெற்றுக்கொண்டு உரிமையை உறுதிபடுத்திக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அவ் ஏலவிற்பனை காணிகளில் பெறுமதி மற்றும் உறுதி இலக்கங்களின் சரியான தன்மையையும் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கவில்லை. | எடுக்க வேண்டும். | ஏலவிற்பனை காணிகளை காணிப் பதிவு அலுவலத்தால் அவற்றின் உண்மைதன்மையை உறுதிப்படித்தி கொள்ளவும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன் என வினையமாக அறியத்தருகிறேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்கள் பதியப்படாமை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 58,581,138 ஆன நடைமுறையல்லாத சொத்துக்கள் சபைக்கு சொந்தமாக இருந்த போதும் அது தொடர்பான சொத்துக்கள் பதிவேடு நாளாதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் விரிவான அட்டவனை நாளாதுவரையாக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் விரிவான அட்டவனைகளை தயாரித்து பதிவேடுகளை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

3.5.2 **விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத் தொகை ரூபா 5,845,318 ஆன ஓட்ட நிலையில் உள்ள 02 டெக்டர்கள் மற்றும் கழிவகற்றும் ஓர் பவுசரும் 03 வருடங்களை விஞ்சிய காலப்பகுதிளிலிருந்து விளைவற்றதாக நிலவின. | சொத்துக்களை பயனுள்ள முறையில் ஈடுபடுத்துவதற்கு செற்பட வேண்டும். | எதிர்காலத்தில் மிக விரைவாக கழிவுப் பொருள் சேர்ப்பதை ஆரம்பிக்கும் வரை இவ் வண்டி வைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2016 ஆண்டு முதல் பாவனைக்கி எடுக்காத பெறுமதி ரூபா 4,380,000 ஆன ஜே.சீ.பீ இயந்திரம் மற்றும் டெக்டரை பழுதுபார்த்து சபையின் செயல்களுக்காக ஈடுபடுத்துவதற்கு 2019 பெப்ரவரி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபையின் சொத்துக்களினால் உரிய பயன்பாட்டை எடுக்க செயற்பட வேண்டும். | ஜேசீபீ இயந்திரம் பழுதுபார்த்தளுக்காக தற்போது விலை மனு கோரப்பட்டு அங்கீகாரத்திற்காக நிறுவன அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளததுடன் டெக்டரையும் எதிர்காலத்தில் பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3.6 பெறுகை

### பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆகஸ்ட் மாதம் ரூபா 98,625 செலவில் நிர்மாணிக்கப்பட்ட 71 வர்க்க மீட்டரைக் கொண்ட உக்கலடையாத கழிவு பொருட் தொட்டடிலின் பகுதியொன்றுக்கு போடப்பட்ட 15 அடி நீளமான 11 அமானோ தகரங்கள் துறுப்பிடித்து இருந்த போதும் அந்த நிலையை சரி செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நீண்டகாலம் நிலைக்கும் வகையில் நிர்மாணங்களை செய்து கொள்ள திட்டமிட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | தகரங்களின் பருமன் உரிய நியமத்தில் உள்ள போதும் சரியான சின்க் விரிப்பு இல்லாத தகரங்கள் போடப்படாததனால் துறுப்பிடித்தலுக்குள்ளாகி இருப்பதாக விளங்குகின்றது. |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக சபையின் மூலதன செலவினத்திற்காக மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடு ரூபா 27.66 மில்லியன் ஆனதுடன் உள்ளவாரான செலவினம் ரூபா 12.13 மில்லியன் ஆனதால் ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 15.33 மில்லியன் அல்லது 56 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பாதீடு நிதி கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படுத்திக் கொள்ள போதியளவு கவனம் செலுத்தி மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் அவ் இலக்குகளை அடைந்து கொளவதற்கு செயற்பட வேண்டும். | முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு மீண்டுவரும் செலவினம் மற்றும் மூலதன செலவினம் மதிப்பீடு செய்யப்பட்டது. எனினும் ஏற்பாடு செய்த மொத்த தொகையிற்கும் பொருத்தமான செலவினம் ஏற்படாததனால் ஒதுக்கீடு சேமிக்கப்பட்டுள்ளது. 2020 ஆண்டின் பாதீடு தயாரிக்கும் போது இந்த செலவின விடயங்கள் மீது அதிக கவனம் செலுத்தி பாதீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2010 திசெம்பர் 14 திகதிய 55 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டு மார்ச் மாதம் முதல் 03 மாதங்களுக்கு ஒரு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்படும் என வினையமாக குறிப்பிடுகிறேன். |